## இனிமையான குழந்தைகளே! நீங்கள் இந்த இராஜயோகக் கல்வியைக் கற்கின்றீர்கள். இராஜ்யத்தை அடைவதற்காக ! இதுவே உங்களது புதுமையான கல்வியாகும்.

கேள்வி: இந்தப் படிப்பில் நிறைய குழந்தைகள் நாளாக நாளாக ஏன் தோல்வி அடைகின்றார்கள்?

பதில்: ஏனென்றால் இந்த படிப்பில் தான் மாயாவுடன் குத்துச் சண்டை நடைபெறுகின்றது. மாயையின் குத்து சண்டையில் புத்திக்கு கடுமையான அடி விழுகின்றது. அதனால் பாபாவுடன் சத்தியமாக இருப்பது இல்லை. சத்தியமான குழந்தைளே சதா பாதுகாப்பாக இருக்கின்றார்கள்.

ஓம் சாந்தி. ஆத்மாக்களாகிய நமக்கு பரமாத்மா, கல்வியைக் கற்றுத் தருகின்றார். இந்த நிச்சயம் எல்லா குழந்தைகளுக்கும் இருக்கின்றது. ஐயாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பாபா வந்து ஒரே ஒருமுறை தான் எல்லையற்ற குழந்தைகளுக்கு கல்வியைக் கற்று தருகின்றார். யாராவது புதிய மனிதர்கள் இந்த விசயத்தைக் கேட்டால் புரிந்து கொள்ள முடியாது. ஆன்மீகக் குழந்தை களுக்கு ஆன்மீகத் தந்தை என்னவாகிறார்? என்பதைக் புரிந்து கொள்ள முடியாது. குழந்தைகள் நீங்கள் தெரிந்து கொண்டிருக்கின்றீர்கள். நாம் அனைவரும் சகோதரர்களாக இருக்கின்றோம். அவர் நமது தந்தையாக, டீச்சராக, சத்குருவாக இருக்கின்றார். குழந்தைகளாகிய உங்களுக்கு இது நிச்சயம் தானாகவே நினைவிருக்கும். இங்கு வந்து புரிந்து கொள்கிறீர்கள், அனைத்து ஆத்மாக்களுக்கும் ஒரே ஒருவர் தான் ஆன்மீகத் தந்தை. அனைத்து ஆத்மாக்களும் அவரைத் தான் நினைவு செய்கிறார்கள். எந்த ஒரு தர்மத்தினராக இருந்தாலும் அனைத்து மனிதர்களும் அவசியம் நினைவு செய்கிறார்கள். பாபா புரிய வைக்கிறார். ஆத்மா அனைவருக்குள்ளும் இருக்கின்றதல்லவா? இப்போது பாபா சொல்கிறார் தேகத்தின் அனைத்து தர்மத்தையும விட்டு தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். நீங்கள் ஆத்மா நடிப்பை நடித்துக் கொண்டிருக் கிறீர்கள். எப்படி நடிப்பை நடிக்கின்றீர்கள்? இதையும் பாபா புரிய வைக்கின்றார். குழந்தைகள் நம்பர்வார் முயற்சியின் அனுசாரமாகப் புரிந்து கொள்கிறார்கள் நீங்கள் இராஜயோகியாக இருக்கிறீர்கள் அல்லவா? படிக்கக் கூடியவர்கள் அனைவரும் யோகியாக இருக்கின்றார்கள். கற்றுத்தரும் ஆசிரியரிடம் அவசியம் யோகத் தொடர்பை வைக்க வேண்டியதாக இருக்கின்றது. இந்தக் கல்வியின் மூலம் நான் இப்படி ஆகப் போகின்றேன் என்ற நோக்கமும் தெரிந்திருக் கின்றது. இந்த படிப்பு ஒன்றுதான். இதைத்தான் கூறப்படுகின்றது இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக ஆகக் கூடிய இராஜயோகம் என்று இராஜ்யத்தைப் பிராப்தியாக அடைய பாபாவுடன் தொடர்பு வைக்கின்றீர்கள். வேறு எந்த மனிதர்களும் இந்த இராஜயோகத்தைக் கற்றுத்தர முடியாது. உங்களுக்கு எந்த மனிதரும் கற்றுத் தரவில்லை. பரமாத்மா ஆத்மாக் களாகிய உங்களுக்குக் கற்றுத் தருகின்றார். நீங்களும் தன்னை ஆத்மா என்று புரிந்து கொள்ளுங்கள். ஆத்மாக்களாகிய நமக்கு பாபா கற்றுத் தருகின்றார். இந்த நினைவு இல்லாததினால் சக்தி நிறைவது இல்லை. எனவே அனேகருடைய புத்தியில் பதிவது இல்லை. எனவே எப்போதும் பாபா சொல்கின்றார் யோகயுக்தாக இருங்கள். நினைவிலிருந்து புரிய வையுங்கள். நாம் சகோதர-

சகோதரருக்கு கற்றுத் தருகின்றோம். நீங்களும் ஆத்மாவாக இருக்கின்றீர்கள். பாபா அனைவருக்கும் தந்தை, டீச்சர், சத்குருவாக இருக்கின்றார். ஆத்மாவைப் பாருங்கள். புகழ் இருக்கின்றது ஒரு வினாடியில் ஜீவன் முக்தி என்று. இதற்கு நிறைய முயற்சி தேவைப்படுகின்றது. ஆத்மா அபிமானி ஆகாததினால் உங்கள் வார்த்தைகளில் சக்தி இருப்ப தில்லை. ஏனெனில் எந்த விதத்தில் பாபா புரிய வைக்கின்றாரோ அந்த விதத்தில் நாம் பிறருக்குப் புரிய வைப்பது இல்லை. ஒரு சிலர் மிக நன்றாகப் புரிய வைக்கின்றார்கள். யார் முள்ளாக இருக்கின்றார்கள்? யார் மலராக இருக்கின்றார்கள்? இவை அனைத்தும் தெரிந்துவிடு கின்றது. பள்ளியில் குழந்தைகள் 5,6 படித்த பிறகு டிரான்ஸ்பர் ஆகின்றார்கள். நல்ல குழந்தைகள் எப்போது டிரான்ஸ்பர் ஆகின்றார் களோ அப்போது அடுத்த வகுப்பில் புத்திசாலி குழந்தைகள் தெரிந்துவிடுகின்றார்கள்.

இந்த குழந்தை நல்ல முயற்சியாளராக இருக்கின்றது. நன்றாகப் படித்திருக்கின்றது. எனவே உயர்ந்த நம்பரில் வந்திருக்கின்றது என்பதை டீச்சர் புரிந்து கொள்வார்கள் அல்லவா? அது லௌகீக படிப்பு. இங்கு அந்த விசயம் கிடையாது. இது பரலௌகீக படிப்பு, இங்கு அப்படி யாரும் சொல்ல மாட்டார்கள். இவர்கள் ஏற்கனவே நன்றாகப் படித்து வந்திருக்கிறார்கள் எனவே நன்றாகப் படிக்கிறார்கள். அப்படி கிடையாது ! அந்தத் தேர்வில் தேர்ச்சி அடையும் போது ஆசிரியர் புரிந்து கொள்கிறார் இவர் நம்பர் 1 ஆக படித்திருக்கின்றார். படிப்பில் நன்றாக முயற்சி செய்திருக்கின்றார். இங்கோ புதிய படிப்பு முதலில் யாரும் படித்து விட்டு வரவில்லை. புதிய படிப்பை படிக்க வைக்கக் கூடியவரும் புதியவர், எல்லாமே புதுமையாக உள்ளது. புதியவர் களுக்குத் தான் கல்வி கற்றுத் தருகின்றார். இதில் யார் நன்றாக படிக்கின்றார்களோ அவர்களை தான் நல்ல முயற்சியாளர்கள் என்று சொல்லலாம். இது புதிய உலகத்திற்கான புதிய ஞானம். வேறு யாரும் இதனைக் கற்று தருபவர்கள் இல்லை. எந்த அளவிற்கு கவனம் கொடுத்து படிக்கின்றீர்களோ அந்த அளவிற்கு முன் வரிசை உயர்ந்த பதவியில் வருகின்றீர்கள். சிலர் மிக இனிமையான கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களைப் பார்க்கும் போது தெரிந்துவிடுகின்றது. இவருக்கு கற்றுத்தருபவர் மிகவும் நல்லவர். இவர்களுக்குள் எந்த கெட்ட குணங்களும் இல்லை. நடத்தையின் மூலம் பேசுவதன் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. பாபா அனைவரிடமும் கேட்கின்றார், இவர் எப்படித் தருகின்றார்? இவருக்குள் எந்த குறையும் இல்லை தானே, எங்களைக் கேட்காமல் ஒருபோதும் செய்தியைக் கொடுக்கக் கூடாது என்று நிறைய பேர் சொல்கிறார்கள். சிலர் நன்றாகக் கற்கின்றார்கள். சிலருக்கு கூர்மையான புத்தி இருப்பதில்லை. மாயையின் யுத்தம் நிறைய நடக்கின்றது. இதை பாபா தெரிந்திருக் கின்றார். மாயா இவர்களை நிறைய ஏமாற்றுகின்றது. 10 வருடம் கற்கின்றார்கள் ஆனால் மாயா மிகவும் பலசாலி! தேக அகங்காரத்தில் வந்து மாட்டி விட வைத்து விடுகின்றது. பாபா புரிய வைக்கின்றார் பலவானாக இருப்பவர் மீது மாயாவின் அடி விழுகின்றது. மாயாவும் பலவானுடன் பலவானாகி யுத்தம் செய்கின்றது. நீங்கள் புரிந்து கொள்வீர்கள். பாபா யாருக்குள் பிரவேசம் செய்கின்றாரோ அவர் நம்பர் 1 ஆக இருக்கின்றார். பிறகு நம்பர்வார் நிறைய இருக்கின்றார்கள். பாபா ஒருவரை ஒருவர் உதாரணமாகத் தருகின்றார். நம்பர்வார் நிறைய பேர் இருக்கின்றார்கள். எப்படி டெல்லியில் கீதா குழந்தை புத்திசாலியான இனிமையான குழந்தையாக இருக்கின்றார். பாபா எப்போதுமே சொல்கின்றார். கீதா எப்போதுமே உண்மை யான கீதையாக இருக்கின்றது.

மனிதர்கள் அந்த கீதையைப் படிக்கின்றார்கள். ஆனால் இதனைப் புரிந்து கொள்வதில்லை. பகவான் எப்படி இராஜயோகத்தைக் கற்றுகொடுத்து இராஜாவுக்கெல்லாம் இராஜாவாக ஆக்கி இருக்கின்றார். சத்யுகம் இருந்தது அங்கு ஒரே ஒரு தர்மம் தான் இருந்தது நேற்றைய விசயம்! பாபா கூறுகின்றார். நான் நேற்று உங்களை செல்வந்தனாக ஆக்கி விட்டுச் சென்றேன். நீங்கள் பத்மாபத பாக்கியசாலியாக இருந்தீர்கள், இப்போது என்ன ஆகிவிட்டீர்கள்? நீங்கள் உணர்கிறீர்கள் அல்லவா? அந்த கீதையைக் கேட்பவர்களிடம் இந்த உணர்வு வருகின்றதா என்ன? கொஞ்சம் கூடப் புரிந்து கொள்வதில்லை. உயர்ந்ததிலும் உயர்ந்த ஸ்ரீமத் பகவத்கீதை என்று புகழ் பாடப்படுகின்றது அல்லவா! அவர்கள் அந்த கீதையைப் படித்து சொல்கிறார்கள். பாபா புத்தகத்தைப் படிப்பதில்லை. வேறுபாடு இருக்கின்றது அல்லவா? அவர்களுக்கு நினைவுயாத்திரை இருப்பதில்லை. அவர்கள் கீழே விழுந்து கொண்டே இருக்கிறார்கள். பாருங்கள் சர்வவியாபி என்ற ஞானத்தின் மூலமாக அனைவரும் எப்படி ஆகி விட்டார்கள்! உங்களுக்குத் தெரியும் கல்ப கல்பமாக இப்படித் நடக்கும். பாபா சொல்கிறார் உங்களுக்குக் கற்பித்து விஷக்கடலில் இருந்து கரை சேர்க்கிறார் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது! சாஸ்திரங்கள் படிப்பது பக்தி மார்க்கத்தினுடையது அவற்றைப் படிப்பதினால் என்னை யாரும் சந்திப்பதில்லை என பாபா கூறுகின்றார். அவர்கள் நினைக்கிறார்கள் எந்தப் பக்கம் சென்றாலும் சேர்வது ஒரே இடம் தான். சில நேரம் சொல் கின்றார்கள் பகவான் ஏதாவது ஒரு ரூபத்தில் கல்வியைக் கற்றுத்தருவார். இப்போது பாபா வந்து கற்றுத் தருகின்றார் என்றால், பிறகு நீங்கள் என்ன படிப்பை கற்றுத் தருகின்றீர்கள். பாபா புரிய வைக்கின்றார் கீதையில் மாவில் உப்பு அளவிற்கே சரியான வார்த்தைகள் உள்ளன. அதை வைத்தே நீங்கள் புரிய வைக்க முடியும். சத்தியுகத்தில் எந்தவித சாஸ்திரமும் கிடையாது. ஆரம்பத்திலிருந்து வருவது இல்லை. ஆனாதி என்ற வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதில்லை. பாபா புரிய வைக்கின்றார் இந்த நாடகம் முற்றிலும் அனாதியானது. உங்களுக்கு பாபா இராஜயோகத்தைக் கற்றுத் தருகின்றார். பாபா சொல்கின்றார் இப்போது நான் உங்களுக்குக் கற்றுத் தருகின்றேன். பிறகு மறைந்துவிடுவேன். நீங்கள் சொல்கின்றீர்கள் உங்கள் இராஜ்யம் அனாதியானதாக இருந்தது. இராஜ்யம் அதே தான். ஆனால் பாவனத்திலிருந்து பதீதம் ஆனதினால் பெயர் மாறி இருக்கிறது. தேவதைகளுக்குப் பதிலாக இந்து என்று கூறிவிட்டார்கள். ஆதி சனாதன தேவி தேவதா தர்மத்தினர் தான் இருக்கின்றார் கள். எப்படி மற்றவர்கள் சதோபிரதானத்திலிருந்து சதோ, இரஜோ தமோவிற்கு வருகின்றார் களோ அப்படியே நீங்களும் இறங்குகின்றீர்கள். இரஜோ நிலைக்கு வரும்போது அபவித்திரமான காரணத்தினால் தேவதைக்குப் பதில் இந்து என்று சொல்லப்படுகின்றது. இல்லை எனில் இந்து இந்துஸ்தானுடைய பெயராக இருக்கின்றது. நீங்கள் உண்மையில் தேவி தேவதையாக இருந்தீர்கள் அல்லவா? தேவதைகள் எப்போதுமே பாவனமானவர்களாக இருக்கின்றார்கள். இப்போது மனிதர்கள் பதீத்தமானவர்களாக ஆகிவிட்டார்கள். எனவே பெயரையும் இந்து என்று வைத்து விட்டார்கள். இந்து தர்மம் எப்போது யாரால் படைக்கப்பட்டது என்ற கேள்விக்கு அவர்களால் பதில் சொல்ல முடியாது. ஆதி சனாதன் இருந்தது. அதற்குத் தான் சொர்க்கம், பாரடைஸ் என்ற மிக நல்ல பெயர்கள் வைத்திருந்தார்கள். எது நடந்ததோ அது மறுபடியும் நடக்கின்றது. இந்த நேரம் நீங்கள் ஆரம்பத்திலிருந்து கடைசிவரை தெரிந்து கொண்டே இருந்தீர்களேயானால் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள். சிலர் இறந்து

விடுகிறார்கள். பாபா குழந்தையான பிறகு மாயாவிடம் யுத்தம் நடைபெறுகின்றது. யுத்தத்தால் சிலர் துரோகியாகி விடுகின்றார்கள். இராவணனுடையவராக இருந்தோம், இராமருடையவராக ஆகின்றோம். பிறகு இராவணன் இராமருடைய குழந்தைகளை வெற்றி அடைந்து தன்பக்கம் எடுத்துச் சென்று விடுகின்றான். சிலருக்கு நோய் ஏற்பட்டு விடுகின்றது. பிறகு இங்கும் இருப்பதில்லை, அங்கும் இருப்பதில்லை, சந்தோஷமும் இருப்பதில்லை, வருத்தமும் இருப்பதில்லை. இரண்டிற்கும் இடையில் இருந்து விடுகின்றார்கள். உங்களில் அப்படி நிறையபேர் இடையில் இருக்கின்றார் கள். இராவணனுடையவராக முழுமையாக ஆவதில்லை, பாபாவுடையவராகவும் முழுமையாக ஆவதில்லை. இப்போது நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கின்றீர்கள். உயர்ந்த ஆத்மா ஆக முயற்சி செய்கின்றீர்கள். இது மிகப் பெரிய, புரிந்து கொள்ள வேண்டிய விசயம் ஆகும். பாபா கேட்கின்றார், நிறைய குழந்தைகள் கை உயர்த்துகின்றார்கள். ஆனால் புரிய வைக்கப் படுகின்றது. புத்தியில் இல்லை. சுபமான வார்த்தைகளைப் பேசுங்கள் என்று பாபா எப்போதும் கூறுகின்றார். நாம் நரனிலிருந்து நாராயணன் ஆக வேண்டும் என்று அனைவரும் கூறுகின்றார்கள். இந்தக் கதை கூட நரனிலிருந்து நாராயணன் ஆக்கக் கூடியது. அஞ்ஞான காலத்தில் கூட சத்ய நாராயணன் கதை கேட்கிறீர்கள் அல்லவா? அங்கு யாரும் கேட்க முடியாது. இதை பாபாதான் கேட்கின்றார். நீங்கள் என்ன புரிந்திருக்கின்றீர்கள் என்று கேட்க உங்களுக்கு தைரியம் இருக்கின்றதா? நீங்கள் அவசியம் பாவனமாக வேண்டும். யாராவது வந்தால் கேட்கப்படுகின்றது நீங்கள் இந்த ஜென்மத்தில் எந்த பாவமும் செய்யவில்லைதானே? பல பிறவிகளாக பாவிகளாகதான் இருக்கின்றீர்கள். இல்லையெனில் மனம் உள்ளே அரித்து கொண்டே இருக்கும். உண்மையைக் கூறுவதால் இலேசாகி விடுவீர்கள். பல குழந்தைகள் உண்மையைக் கூறாத காரணத்தினால் மாயை ஒரே அடியாக வேகமாக அடித்துவிடுகின்றது. இதில் மிகப் பெரிய கடுமையான குத்து சண்டை நடைபெறுகின்றது. அந்த சண்டையில் அடி உடலுக்குதான் விழுகின்றது. இதில் புத்திக்குப் பலமான அடி விழுகிறது; இதை பாபா கூட தெரிந்திருக்கின்றார். பிரம்மா பாபா கூறுகின்றார் நான் அனைத்து பிறவிகளிலும் கடைசி பிறவியில் இருக்கின்றேன். நான் அனைவரைக் காட்டிலும் பாவனமாக இருந்தேன். இப்போது அனைவரைக் காட்டிலும் பதீதமாக இருக்கின்றேன். மீண்டும் பாவனமாகிவிடுவேன். நான் மகான் ஆத்மா என்று அவர் தன்னை ஒருபோதும் சொல்வதில்லை. பாபா கூட பதில் தருகின்றார். இவர் அனைவரையும் காட்டிலும் பதீதமாக இருக்கின்றார். பாபா கூறுகின்றார், நான் மாற்றான் தேசத்தில் மாற்றான் சரீரத்தில் வருகிறேன். இவருடைய அனைத்து ஜென்மத்தின் கடைசி நேரத்தில் நான் பிரவேசம் ஆகின்றேன் இவரே முழுமையாக 84 ஜென்மம் எடுத்திருக்கின்றார். இப்போது இவர் கூட பாவனமாவதற்காக முயற்சி செய்கின்றார். மிக கவனமாக இருக்க வேண்டும். பாபாவிற்குத் தெரிகிறதல்லவா? இந்த பாபா குழந்தை நெருக்கத்தில் இருக்கின்றது. இவர் ஒருபோதும் பாபாவிடமிருந்து பிரிந்திருக்க முடியாது. விட்டு விட்டு சென்றுவிடுவோமோ என்ற சிந்தனை கூட வரமுடியாது. என்னுடைய மிக நெருக்கத்தில் அமர்ந்திருக்கின்றார். என்னுடையவர் பாபா இல்லையா? என் வீட்டில் அமர்ந்திருக்கின்றார். சில நேரம் பாபா விளையாட்டாகப் பேசுகின்றார். இந்த பாபா என்னை குளிக்க வைக்கின்றார். சாப்பாடு ஊட்டி விடுகின்றார். நான் சின்னஞ்சிறு குழந்தையாக இருக்கின்றேன். இப்படி பலவிதத்தில் பாபாவை நினைவு செய்கின்றேன். குழந்தைகளாகிய

உங்களுக்கும் புரிய வைக்கின்றேன். இப்படி இப்படி நினைவு செய்யுங்கள். பாபா நீங்கள் மிக இனிமையானவராக இருக்கின்றீர்கள். எங்களை உலகிற்கே (விஷ்வத்திற்கே) அதிபதி ஆக்குகின்றீர்கள். இந்த விஷயங்கள் யார் புத்தியிலும் இருக்க முடியாது. பாபா அனைவரையும் புத்துணர்ச்சி அடைய வைக்கின்றார், அனைவரும் முயற்சி செய்கிறார்கள். ஆனால் நடத்தை அவ்வாறு இருக்க வேண்டுமல்லவா? சிலர் எழுதுகின்றார்கள் பாபா தவறு நடந்துவிட்டது மன்னித்துவிடுங்கள் என்று. எனது குழந்தையான பிறகு தவறு செய்தீர்கள் என்றால் தண்டனை 100 மடங்கு அதிகமாகிவிடுகின்றது. மாயாவிடம் தோல்வி அடைந்தீர்களெனில் எப்படி இருந்தீர்களோ அப்படியே ஆகிவிடுவீர்கள். நிறையபேர் தோல்வி அடைகிறார்கள். இது மிகப் பெரிய குத்துசண்டை. இராமனுக்கும், இராவணனுக்கும் இடையில் நடக்கும் சண்டை. குரங்கு சேனையைக் காட்டுகிறார்கள். இவை அனைத்துமே குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட விளையாட்டு. எப்படி சின்னக் குழந்தைகள் அறியாமையில் இருக்கின்றார்கள் அல்லவா? பாபா கூறுகின்றார் இவர்களது புத்தி சிறிய புத்தியாக இருக்கிறது. ஒவ்வொருக்கும் ஈஸ்வரனின் ரூபம் என்று கூறுகின்றார்கள் என்றால், ஒவ்வொருவரும் ஈஸ்வரனாகிப் படைக்கின்றார்கள் பாலனை செய்கின்றார்கள் பின் விநாசம் செய்கின்றார்கள். ஈஸ்வரன் வந்து எதையாவது விநாசம் செய்வாரா? இது எவ்வளவு அஞ்ஞானம்? எனவே தான் பொம்மைக்கு பூஜை செய்து கொண்டிருக்கின்றார்கள் என கூறப்படுகிறது. அதிசயமாக இருக்கின்றது! மனிதர்கள் புத்தி என்னவாகி விட்டது? எவ்வளவு செலவு செய்கின்றார்கள்? பாபா புகார் செய்கின்றார் உங்களை நான் எவ்வளவு உயர்ந்தவனாக்குகிறேன்! நீங்கள் என்னவாகி விட்டீர்கள்? உங்களுக்குத் தான் தெரியும் நாம் தான் தேவதையாக இருந்தோம். பின் சக்கரம் சுற்றி மீண்டும் பிராமணராக ஆகின்றோம். பின் நாம் தான் தேவதையாக ஆகின்றோம். இது புத்தியில் பதிந்திருக்கின்ற தல்லவா! இங்கு அமர்ந்திருகின்றீர்கள் என்றால் புத்தியில் ஞானம் இருக்க வேண்டும். பாபா ஞானம் நிறைந்தவராக இருக்கின்றார் அல்லவா! அவர் சாந்தி தாமத்தில் இருந்தாலும் கூட அவரை ஞானம் நிறைந்தவர் என்று அழைக்கப்படுபடுகின்றார். உங்கள் ஆத்மாவில் கூட முழு ஞானம் இருக்கின்றதல்லவா? ஞானத்தின் மூலமாக எங்கள் கண் திறந்துவிட்டது என்று சொல்கிறார்கள். பாபா உங்களுக்கு ஞானக் கண் தருகின்றார். ஆத்மாவிற்கு உலகத்தின் ஆதி-மத்ய-அந்திம ஞானம் தெரிந்துவிட்டது. சக்கரம் சுழன்று கொண்டே இருக்கின்றது. பிராமணர் களுக்குதான் சுயதர்சன சக்கரம் கிடைக்கின்றது. தேவதைகளுக்கு படிப்பு சொல்லித் தருபவர் யாருமில்லை. அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க அவசியம் இல்லை. நீங்கள் தான் படிக்க வேண்டும். படித்து தேவதை ஆகின்றீர்கள். இப்போது பாபா வந்து புதுப்புது விசயங்களைப் புரிய வைக்கின்றார். புதிய கல்வியைக் கற்று நீங்கள் உயர்ந்த நிலை ! அடைகின்றீர்கள். முதலில் இருந்து கடைசி கடைசியிலிருந்து முதல் நிலை இது படிப்பல்லவா? நீங்கள் புரிந்திருக் கின்றீர்கள் பாபா ஒவ்வொரு கல்பமும் வந்து பதீதத்திலிருந்து பாவனமாக்குகின்றார். பிறகு இந்த ஞானம் முடிவடைந்துவிடும். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலத்திற்குப் பிறகு தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்ல குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு, ஆனமீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மிக மிக கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவராக இருக்க வேண்டும். இனிமையானவராகி நடந்து கொள்ள வேண்டும். தேக அகங்காரத்தில் ஒருபோதும் வரக்கூடாது. பாபா குழந்தையான பிறகு எந்த ஒரு தவறும் செய்யக் கூடாது. மாயாவின் குத்துச் சண்டையில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

2. தன் வார்த்தைகளில் சக்தியை நிரப்புவதற்கு ஆத்ம அபிமானியாக இருக்க பயிற்சி செய்யுங்கள். பாபா கற்றுக் கொடுப்பதை நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த நினைவு இருந்தால் அதில் கூர்மை நிறையும்.

வரதானம் : அழிவற்ற போதையிலிருந்து ஆன்மீக மகிழ்ச்சி மற்றும் கேளிக்கையின் அனுபவம் செய்யக் கூடிய பிராமணனிலிருந்து பரிஸ்தா ஆகுக.

பிராமணனிலிருந்து பரிஸ்தா ஆகக் கூடிய நீங்கள் தேவதைகளை விட உயர்ந்தவர்கள். தேவதைகளின் வாழ்க்கையில் தந்தையின் ஞானம் இருப்பது கிடையாது. பரமாத்ம சந்திப்பின் அனுபவமும் இருப்பது கிடையாது. ஆகையால் நான் தேவதைகளை விட உயர்ந்த பிராமணன் மற்றும் பரிஸ்தா ஆகக் கூடியவன் என்ற போதை இப்போது சதா இருக்க வேண்டும். இந்த அழிவற்ற போதையானது ஆன்மீக மகிழ்ச்சி மற்றும் கேளிக்கையின் அனுபவம் செய்விக்கக் கூடியது. ஒருவேளை இந்த போதை சதா இல்லையெனில் சில நேரம் மகிழ்ச்சியாக இருப்பீர்கள், சில நேரம் குழப்பத்தில் வந்து விடுவீர்கள்.

சுலோகன்: தனது சேவையையும் தந்தையிடம் அர்ப்பணித்து விடும் போது தான் சமர்ப்பண ஆத்மா என்று கூற முடியும்.